# ஸ்டெம் செல் மூலம் மாணவனின் ரத்தப் புற்றுநோய்க்கு சிகிச்சை

சென்னை, பிப்.4: தானமாகப் பெறப்பட்ட ஸ்டெம் செல் மூலம் மாணவனின் ரத்தப் புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

குஜராத் மாநிலம், சூரத் நகரைச் சேர்ந்தவர் அங்கித் (17). பிளஸ் 2 முடித்த இவருக்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், ரத்தப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்கள் இவருக்கு ஸ்டெம் செல் மூலம் சிகிச்சை அளிக்க முடிவு செய்தனர். ஆமதாபாதைச் சேர்ந்த இளம்பெண் ஜினால் (24) என்பவரின் ஸ்டெம் செல் பிரிவு, அங்கித்துக்கு பொருத்தமாக இருப்பது தெரிய வந்தது.

அதையடுத்து அந்தப் பெண்ணிடம் இருந்து ரத்தத்தை எடுத்து, அதிலிருந்து ஸ்டெம் செல் பிரித்தெடுக்கப்பட்டு சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

அந்த ஸ்டெம் செல்லை மருத்துவர்கள் ஊசி மூலம் அங்கித்துக்கு ஏற்றினர்.

ஒன்றரை ஆண்டுகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, பரிசோதனை செய்து பார்த்ததில் அங்கித்துக்கு ரத்தப் புற்றுநோய் முழுவதுமாக குணமாகி விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.




ஸ்டெம்செல் தானம் பெறப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்த மாணவர் அங்கித். உடன் ஸ்டெம் செல் தானமளித்த இளம்பெண் ஜினால், அப்பல்லோ மருத்துவமனை குழந்தைகள் ரத்த புற்றுநோய் சிகிச்சைத் துறை மருத்துவர் ரேவதி ராஜ், தாத்ரி அமைப்பின் தலைமை செயல் அதிகாரி ரகு ராஜகோபால், புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜோஷ் எம்.ஈசாவ்.